**பேஸ் லைன் வீதிச் செயற்திட்டம் - கட்டம் III - 2018**

------------------------------------------------------------------------------------------------

பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது 2009 நவம்பர் 19 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

------------------------------------------------------------------------------------------------

தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்கவிப்பு அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிருலப்பனையிலிருந்து கொழும்பு – ஹொரணை வீதிக்கு 860 மீற்றர்கள் நீளமான புதிய வீதியொன்றை நிர்மாணிப்பதன் மூலம் வீதி போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். காணி சுவிகரிப்பின் கிரயம் ரூபா 3,500 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்த அதேவேளை செயற்திட்டத்திற்கான சிவில் வேலைகளின் கிரயம் ரூபா 7,041.29 மில்லியனாக மதிப்பிடப்படடிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

---------------------

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக முன்னேற்றம்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

கிருலப்பன தொடக்கம் துடுகமுவ சந்தி வரையான பேஸ் லைன் வீதியினுடைய பகுதியின் புனர்நிர்மான வேலைகள் மீதான செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2009 இல் ஆரம்பிக்கப்பட்டு 2018 திசெம்பர் 31 வரை தொடரப்பட்டிருந்தது. 199 காணித்துண்டுகள் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டிருப்பினும் 27 காணித்துண்டுகள் மாத்திரமே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், கொள்வனவு செய்யப்பட்ட காணிகள் மீதான இழப்பீட்டு கொடுப்பனவினை செலுத்துதலின் தாமதம் காரணமாக மொத்தமாக ரூபா 82.50 மில்லியன் வட்டி காணி உரிமையாளர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 100 மில்லியன் பெறுமதியான ஒதுக்கீடு 2018 - பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்டிருந்ததுடன் மொத்தமாக ரூபா 10 மில்லியன் மாத்திரமே செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மீள்நிர்மானத்தின் பிரதான பாகங்கள் பின்னர் குறைக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தினால் செய்யப்பட்ட மிகுதி வேலைகளின் பௌதீக செயலாற்றம் மிகவும் மந்தகதியாக இருந்தது. இருப்பினும் அமுல்படுத்தல் முகவர் செயற்திட்டத்தின் தொடர்ச்சியினை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முடுவதற்கும் சாத்தியப்பாடு காணப்படுகின்றது.

### 2.2 பலனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயங்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் காரணமாக மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டத்தின் வடிவமைப்பிற்காக 2008 இல் அரச பொறியியல் கூட்டுத்தாபணத்திற்கு மொத்தமாக ரூபா 1.17 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் அவ்வடிவமைப்பு வேலைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்தின் நோக்கெல்லை குறைக்கப்பட்டதன் பிரகாரம் அவ்வாறான வீட்டுத்திட்டத்தின் தேவை கணக்காண்வில் நியாயப்படுத்த முடியாமல் இருந்தது. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரித்தது. | அரச கொள்கைகளின் மாற்றம் காரணமாக செயற்திட்டத்தின் நோக்கெல்லை குறைக்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் புலனாய்வு செய்யப்படல் வேண்டும். |